சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 08.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 2204/E/2024**

| | | |
|---|---|---|
| திரு.க.சக்திவேல்சாமி | .. | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை- 600 005. | | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 17.02.2026 மற்றும் 08.05.2026 தேதியிட்ட உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திரு.க.சேதுராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி அவர்கள் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 29.05.2026 தேதிட்ட அறிக்கையில், 08.05.2026 தேதியிட்ட தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் உத்தரவின்படி, மனுதாரரின் கோரிக்கை மனு தொடர்பாக நாளதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கோப்பு எண்.நி.மு.ஜ1/5937/2023, நாள் 16.03.2024 கோப்பு நகல்கள் 211 பக்கம் சான்றிட்ட நகல்கள் பொதுத் தகவல் அலுவலரின் கடிதம் ஜ1/6654/2025, நாள் 20.05.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2. இதற்கிடையில் மனுதாரர் இவ்வாணையத்திற்கு முகவரியிட்டுள்ள 22.05.2026 தேதியிட்ட கடிதத்தில், சட்டப் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையத்தைக் கோரியுள்ளார்.

3. மனுதாரரின் கடிதம் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்களை ஆணைம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரரின் 13.08.2023 தேதியிட்ட மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

b) மேற்படி தகவல்களை மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு இவ்வாணையத்தால் 17.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிக்குப் பின், மனுதாரர் கோரிய தகவல்களுக்கான இனம் வாரிய தகவல்கள் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வட்டத் துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கடையநல்லூர் அவர்களின் கடித ந.க.ஆ3/402/2026, நாள் 15.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தென்காசி மாவட்டம், கடையநல்லூ வட்டம், புளியங்குடி நகரம் வார்டு-Eஇ பிளாக் 6 புல எண்.166-ல் ஆவணத்தின் அடிப்படையில் பரப்பு திருத்தம் செய்யக் கோரி திரு.சக்திவேல்சாமி என்பவர் தனது முகவர் திரு.செல்வக்குமார் என்பவருக்காக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரி, மேற்படி பரப்பு திருத்தம் தொடர்பாக மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையில், தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ந.மு.ஐ1/5937/2023, நாள் 16.03.2024-ன்படி பரப்பு திருத்தம்செய்யப்பட்டு மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், மனுதாரர் சக்திவேல்சாமி தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவும் தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மனுவும் ஒரே கோரிக்கை தொடர்பானது என 21.04.2026 தேதியிட்டு இவ்வாணையத்தில் நேரில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், மேற்படி பரப்பு திருத்தம் தொடர்பாக மனுதாரர் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த முழுக்கோப்பின் நகலினை மனுதாரருக்கு தகவலாக வழங்க இவ்வாணையத்தால் 08.05.2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

c) 08.05.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, மனுதாரரின் கோரிக்கை மனு மீதான நடவடிக்கை கோப்பு எண்.நி.முஐ1/5937/2023, நாள் 16.03.2024 கோப்பு நகல்கள் பக்கம் 211 சான்றிட்ட நகலானது பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி அவர்களின் ந.க.எண்.ஐ1/6654/2025, நாள் 20.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

d) இவ்வழக்கை பொருத்தவரையில், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுக் கோரியுள்ள மனுதாரர் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த முழுக்கோப்பின் நகல் இவ்வாணையத்தின் 17.02.2026 தேதியிட்ட

உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதால், இவ்வழக்கில் மேல்நடவடிக்கை மேற்கொள்ள முகாந்திரம் ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு, **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2204/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-VI,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை- 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி மாவட்டம்- 627 811.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.க.சக்திவேல்சாமி, த/பெ.A.Ganapathiappanadar,
89, Arasady Vinayagar Kovil Street,
T.N.Pudugudi, Puliangudi,
Tenkasi District - 627 855.

Copy to: File MP/PA,